உ

பண்பும் பெருமையும் மிக்க தாய் தந்தையருக்கு

"அம்மா அப்பா குரு மூவரும் எங்கள் தெய்வம்"



ஆக்கியவர்

அடியார் விபுலானந்தர்

வெளியிடுவோர்

வேதாந்த ஞான மன்றம்(கனடா)

செயற்பாடுகள்:

சிறுவர் தமிழ் சமயப் பள்ளிக்கூடம், சமய நூல் நிலையம், இந்து மத போதனைகள், தியான யோகப்பயிற்சிகள், சித்த மருத்துவ ஆலோசனைகள், சமய சமூகசேவைகள்.

(416)769-7747, (416)492-2235, (905)238-5609

எமது சமய தமிழ் வகுப்புக்கள் நடைபெறும் இடங்கள்

Etobicoke

1. 2901 Kipling Ave # 1005 (Kipling & Steels) (416) 769-7747

York (Toronto)

2. 2468 Eglinton Ave # 504 (Keele & Eglinton)
(416) 658-7957

North York

3. Jane & Finch (416) 739-0783
4. 2980 Donmills Road # 711 (Donmills & Sheppard)
(416) 502-8255

East York

5. 540 Dawes Road # 405 (Victoria Park & St Clair)
(416) 755-2754
6. 1 Massy Square # 609 (Victoria Park & Danforth)
(416) 285 4004
7. 71 Thorncliffe Park Dr # 2109 (Donmills & Eglinton)
(416) 423-8764

Missisagua

8. 1440 Bloor St East # 604 (Dixie & Bloor)
(905) 238-5609
9. 1615 Bloor St East # 1208 (Dixie & Bloor)
(905) 624-4016

Scarborough

10. 1050 Markham Road # 1717 (Ellesmere & Markham)
(416) 289-3626
11. 9 Castor Cres (Ellesmere & Markham) (416) 438-6709

12. 39 Kimbercroft Court # 600 (Markham & Sheppard)
(416) 291-4338
13. Morning Side & Old Finch (416) 724-1049

14. 815 Midland Ave # 302 (Eglinton & Midland)
(416) 264-5440
15. 2254 St Clair Ave East (Victoria Park & St Clair)
(416) 751-0075
16. 30 Guilder Drive # 910 (Eglinton & Midland)
(416) 269-8978
17. 711 Kennedy Rd # 111 (Eglinton & Kennedy)
(416) 267-1220
18. Samy & Sons 1884 B Kennedy Rd (at Ellesmere)
(416) 267-3149
19. 250 Brenyon Way # 2002 (Neilson & Tapscot)
(416) 284-4465
20. 20 Stone Hill Court # 606 (Finch & Warden)
(416) 492-2235
21. 100 Prudential Dr # 1611 (Midland & Lawrence)
(416) 285-9443
22. 15 Cougar Court # 1203 (Markham & Eglinton)
(416) 267-3813
23. 3845 Sheppard Ave East # 707 (at Kennedy)
(416) 298-4111
24. 2950 Lawrence Ave East # 234 (at Mc Cowan)
(416) 289-1571

தமிழ் மக்கள் வாழும் ஏனைய இடங்களிலும் வகுப்புக்கள் ஆரம்பிக்கவுள்ளோம். பிள்ளைகளுக்கு தமிழ் சமய நற்போதனைகளைக் கற்பிக்க விரும்பும் பெற்றார்கள் எம்மைத் தொடர்புகொள்ளலாம்.

(416) 769-7747 (416) 492-2235

பள்ளிக்கூட அதிபர் : தவத்திரு யோகி பஞ்சாட்சரனார் (416) 269-6129
பொதுச் செயலாளர் : திருமதி சுகலக்சுமி தர்மலிங்கம் (416) 492-2235
தலைவர் : அடியார் விபுலானந்தா (416) 769-7747 (416) 805-7187

வேதாந்த ஞான மன்றம்(கனடா)

1997 நிர்வாக சபை

போஷகர்: சத்குரு சுவாமி பிரகாஷ்மயானந்தர்

ஆலோசகர்: தவத்திரு யோகி பஞ்சாட்சரனார்
(மன்றத்தின் சமயப் பள்ளிக்கூட அதிபர்)

தலைவர்: திரு. அடியார் விபுலானந்தா
(மதம் சஞ்சிகை ஆசிரியர்)

உ ப தலைவர்கள்: திரு. க. சிற்றம்பலம்
(வைத்தியர், சைவப்புலவர்)
திருமதி. ஜெயஸ்ரீ கணேசநாதன்

பொதுச் செயலாளர்: திருமதி. சுகலக்ஷ்மி தர்மலிங்கம்

இணைச் செயலாளர்கள்:
திருமதி. நளாயினி குணரட்ணம்
திருமதி. புஷ்பா துரைரட்ணம்

பொருளாளர் : திருமதி. லீலா வெற்றிவேற்கரசு
(நூபுராலயா நடனப் பள்ளி அதிபர்)

செயற்குழு உறுப்பினர்கள்:
திருமதி. வளர்மதி. ஜெயகாந்தன்
(மன்ற பத்திராதிபர்)
திரு. மு. வெற்றிவேற்கரசு
திருமதி. கலாஜோதி உதயகுமார்
(மன்ற நூலகப் பொறுப்பாளர்)
திருமதி. கேதீஸ்வரி தர்மரட்ணம்

நாம் பிறரை வெறுக்கும் போது இறைவனும் எம்மை வெறுக்கிறார். பிறர்மீது அன்பு செலுத்துவதால் இறைவன் எம்மோடு தனது அன்பாகிய கருணையைப் பொழிகிறார். நாம் பிறருக்கு உதவி செய்வதால் இறைவன் எம்மைத் துன்பத்தில் இருந்து காப்பாற்றுகிறார். எல்லாம் வல்ல இறைவனின் கருணையால்தான் நாம் தொண்டு செய்யும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.

- மன்ற நிர்வாகிகளும் அங்கத்தினர்களும் -

உலகம் போற்றிய தலைவர்களும், ஞானிகளும், மகான்களும், சிறுவயதிலே நற்போதனைகளைப் பெற்றதனாலேயே உயர்வடைந்தார்கள், உலகத்தாலும் போற்றப்பட்டார்கள்.

இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்களாகவும் வழிகாட்டிகளாகவும் வரப்போகிறார்கள். உங்கள் பிள்ளைகள் நல்லவர்களாக, நல்ல வழிகாட்டிகளாக, நல்ல தலைவர்களாக, சான்றோராக வரவேண்டுமென்று விரும்புங்கள். நல்லவர்களாலேதான் சமுதாயங்களும் நாடுகளும் தீயவர்களிடமிருந்து காப்பாற்றப்படுகிறது.

நல்ல பெற்றாரினால் நல்ல பிள்ளைகள் உருவாக்கப்படுகிறார்கள். நல்ல பிள்ளைகளே நல்லோராகிறார்கள். நல்லவர்களால் வீடும், சமூகமும், நாடும், உலகமும் நலமடைகிறது.

ஆக்கியவர்

அடியார் விபுலானந்தா

வெளியிடுவோர்

வேதாந்த ஞான மன்றம்

1884B Kennedy Rd
Scarborough

ஜ·லை
1997

1440 Bloor St East # 604
Missisagua

421 Jane St, P.O Box # 25002, Toronto, Ontario, M6S 3Z0, CANADA

(416) 769-7747 / 492-2235 (905) 238-5609

புதிய பிறப்பு

இன்றைய நாள் உனக்குப் புதிய பிறப்பு, சிறந்தது! சாதனையைத் துவக்கு! கடந்த காலத் தவறுகளை இரு கரங்குவித்து வழியனுப்பிவிடு! புதியவனாய், தூய்மையானவனாய்ச் சாதனையை இப்பொழுதே துவக்கு!

கடந்த காலத் தவறுகளினால் நல்ல பாடங்களைக் கற்றுவிட்டாய், ஆகையால், உன் ஆன்மீகப்பாதையில் இப்பொழுது புதிய தெம்புடன், நம்பிக்கையுடன்,புதிய உறுதியுடன், விழிப்புடன் முன்னேறு.

- சுவாமி சிவானந்தர் -

திருமந்திரம்

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.

அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிலர்தத் துவத்தை
நெறிதான் மிக மிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே.

- திருமூலர் -

மாயையின் தாலாட்டிலே எத்தனை காலம் தூங்குவது? மாயை உன்னை மரணத்தின்பிடிக்கு இழுத்துச் செல்கிறது. நீ தூய்மையான, சர்வ சக்தி படைத்த ஆத்மா என்பதை ஏன் உணரமுடியவில்லை? விழித்துக்கொள்! முன்னேறு!

பேரன்புடைய தாய் தந்தையரே உங்களுக்கு எமது அன்பு வணக்கம்

எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் உங்களுக்குள் இருப்பதை நாம் நன்கு அறிவதனால் உங்களை அன்போடு வணங்குகின்றோம், உங்களுக்கு நாம் செலுத்துகின்ற அன்பு கலந்த வணக்கம் உங்கள் மூலமாக இறைவனைச் சென்றடைகின்றது. உங்களுக்கு நாம் செய்கின்ற சேவை நேரடியாக இறைவனையே சென்றடைகின்றது.

இறைவன் உங்களோடு இருப்பதை நீங்கள் உணரும் போது தெய்வீக அருள் வீசுவதை நிச்சயம் காண்பீர்கள்.

உங்களைக் கௌரவிக்கின்றோம்

எமது மன்றத்தில் உங்கள் பிள்ளைகளை நற்கல்வி போதிக்க அனுப்புவதையிட்டு உங்களை உண்மையிலேயே உயர்ந்தவர்கள் எனப் பாராட்டுகின்றோம். வாழ்க்கைக்கு சமயம் முக்கியம் என்பதை அறியாதவர்களும் தர்ம சிந்தனை இல்லாத பெற்றாரும் சமயத்தை சும்மா சொல்லிக் கொடுத்தால் என்ன? என்று கேட்கிறார்கள். சும்மா எதைப்பெற்றாலும் அது சும்மாதான், அதற்குப் பெறுமதி கிடையாது, " ஏற்பது இகழ்ச்சி" என ஔவையார் பாடியுள்ளார், இலவசமாகப் பெறும் பழக்கம் இழிவான பழக்கம் என்பதை நாம் அறிந்துள்ளோம்.

நீங்கள் உண்மையில் உயர்ந்தவர்கள்

பிள்ளைகள் மீது அக்கறையுள்ள பெற்றார் நீங்கள். பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்படைய வேண்டும் என்பதற்காக உண்மையை உணர்ந்து எம்மை நாடி வந்துள்ளீர்கள். இப்படிப்பட்ட நல்ல எண்ணம் கொண்ட பெற்றாரின் பிள்ளைகள் ஒரு போதும் கெட்டுப் போவதில்லை. நீங்கள் செய்த நல்ல பிரார்த்தனையின் பயனாகத்தான் பிள்ளைகளை எம்மிடம் அனுப்பும்படி இறைவன் உங்களைத் தூண்டியுள்ளார். நீங்கள் கொடுத்து வைத்த தாய் தந்தையர். நீங்கள் உண்மையில் உயர்ந்தவர்களே.

குருதட்சணை கொடுப்பவர்களோடு லக்ஷ்மி என்றென்றும் வாசம் செய்கிறாள்

சன்மானம் இல்லாமல் பெறுகின்ற கல்வி பயனளிப்பதில்லை. சும்மா(இலவசம்)பெறும் பழக்கமுடையவர்கள் தமது நன்மைகளையும், புண்ணியங்களையும் இழப்பதோடு இழிவான பழக்கத்துக்கும் அடிமையாகிறார்கள். அத்தோடு நற்பண்பு, நல்ஒழுக்கம், தர்மம் ஆகிய பெரும் பேறுகள் அவர்களிடமிருந்து விலகிவிடுகிறது.

ஆனால் குருவை மதித்து, குருவுக்குத் தட்சணை கொடுப்ப வர்களுக்கு கற்ற கல்வியினால் சிறப்பான பலன் ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல அவர்களை விட்டு தர்மம் விலகுவதில்லை. அவர்களுக்கு லக்ஷ்மிகடாட்சமும் நிறைய உண்டு. நீங்கள் எமக்குத் தரும் சன்மானம்(குரு தட்சணை) சிறப்பான தர்மங்களில் ஒன்று, இப்படியான உயர்ந்த தர்மம் செய்பவர்களுக்கு சரஸ்வதி கடாட்சமும், மகாலக்ஷ்மி கடாட்சமும் தவறாது கிடைக்கிறது.

எமது போதனைகளால் உங்கள் பிள்ளைகளுக்கு ஏற்படும் நன்மைகள் என்ன என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்!

(1) தாய் தந்தையரை வணங்குதல்.

மாதா, பிதா, குரு தெய்வம் என்பதை நாம் வெறும் ஏட்டுக் கல்வியாகச் சொல்லிக் கொடுப்பதல்ல. அதன் உண்மையை உணரவைத்து, அதற்காகிய விளக்கம் கொடுத்து, மூவரையும் போற்றி வணங்கி வாழும் சிறந்த பழக்கத்தை கற்றுக்கொடுத்து அதை வாழ்க்கையில் கடைப்பிடிக்கச் செய்வதே எமது முதல் பாடம். தாய் தந்தையரை வணங்கும் பழக்கம் கொண்ட பிள்ளைகளுக்கு நல்ல பண்பும் நற்குணங்களும் வளர்ச்சியடைகிறது.

(2) குரு வணக்கம்

குருவை வணங்கும் பழக்கம் கொண்ட பிள்ளைகளுக்கு கற்ற கல்வி வீண்போவதில்லை. அதன் பயனாக சிறந்த அறிவாற்றலும், காரியத்திறமையும், புகழும் பிரகாசமான வாழ்வும் கிடைக்கிறது.

(3) நற் போதனைகள்

எல்லோருக்கும் பொது நியதியான துன்பங்கள், கஷ்டங்கள், சோதனைகள் வரும் போது மனம் வேதனை ப்படுகிறது, மன வேதனையால் ஆரோக்கியம் கெடுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது, சிக்கலான சூழ்நிலை ஏற்படும் போது வாழ்க்கையில் எதிர்பாராத பின்னடைவு, குழப்பம், சீர்கேடு ஏற்படக் கூடும். இவற்றிலிருந்து தப்பிக்கொள்ள நற்போதனைகளால் பெற்ற அறிவு மனதை தேற்றிக் கொள்ளவும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும் செய்து சிக்கலில் இருந்து வெளியேற்றுகிறது. இளமையில் நற்போதனைகள் பெறுவதால் இலகுவில் எந்த நேரத்திலும் மனதைத் தேற்றி வழி தவறாமல் வாழ முடிகிறது.

அதுமட்டுமல்ல நல்ல போதனைகளால் பெறும் அறிவினால் நல்லது எது கெட்டது எது எனும் உண்மை உணர்வு பெறப்படுகிறது, தீய வழியினால் தீமை ஏற்படும் என்பதை தாமாகவே அறிந்து கொள்வார்கள். எப்போதும் நல்லவர்களையே நண்பர்களாக தேர்ந்தெடுத்துப் பழகுவார்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் சிரமங்களைப் பொருட்படுத்தாது நல்ல வழியிலேயே வாழ்ந்து முன்னேற்றம் காண்பார்கள். நல்லதை அறிவதால் ஒழுக்கம் உள்ளவர்களாக வாழ்வார்கள். ஒழுக்கமே உயர்ந்த தர்மம். ஒழுக்கமும் நல்ல திறமையும் உள்ளவர்கள் எல்லோராலும் விரும்பப்படுவார்கள்.ஒழுக்கம் உள்ளவர்களால் வழிநடாத்தப்படும் சமூகமே சிறப்படைகிறது. இன்றைய பிள்ளைகளே நாளைய தலைவர்களாகிறார்கள். ஒழுக்கம் உள்ளவர்களுக்குக் கிடைக்கும் புகழ்தான் நிரந்தரமானது.

பிள்ளைகள் நற்புகழைப் பெறும்போதுதான் பெற்றார் உண்மையான மகிழ்ச்சியைக் காண்பார்கள்.

(4) தேவாரம்

தேவாரத்தை வெறும் மனப் பாடம் செய்வதால் எந்த நன்மையும் ஏற்படாது. தேவாரம் ஏன் பாடப்பட்டது. பாடியவர்கள் என்ன நன்மை அடைந்தார்கள், தேவாரத்தில் இருக்கும் கருத்து என்ன என்பதை விளங்கிப் படிக்கும்போதுதான் தேவாரம் படிப்பதனால் பயன் கிடைக்கிறது. நாம் பிள்ளைகளுக்கு தேவாரம் படிப்பிக்கும் போது மேற்கூறிய விளக்கங்களுடன் சொல்லிக் கொடுக்கிறோம்.

(5) இந்து சமய விளக்கங்கள்.

இன்றைய பிள்ளைகள் எதையும் விளக்கத்தோடு கற்பதைத்தான் விரும்புகிறார்கள். எமது இந்து மத சாஸ்திரங்களும், தத்துவங்களும் நிரூபிக்கக் கூடிய உண்மைகளையே கொண்டுள்ளன. பல கடவுள்கள், பல நூல்கள் பல அவதாரங்கள், சொர்க்கம், நரகம், மறுபிறவி, கர்மவினைகள் போன்ற பலவிதமான விளங்கமுடியாத சந்தேகங்களை பிள்ளைகள் கேட்டறிவதற்கு ஆவலாக உள்ளார்கள். இந்து மதத்தின் சிறப்பை அறிந்து கொள்ளமுடியாத பிற மதத்ததினர்களும் இந்து மக்களுக்கும், பிள்ளைகளுக்கும் மனக் குழப்பத்தை ஏற்படுத்தி மதமாற்றம் செய்ய முனைகிறார்கள். பிள்ளைகளின் சமய சம்பந்தமான கேள்விகளுக்கு நாம் சிறந்த முறையில் விளக்கம் சொல்லிக் கொடுக்கிறோம்.

(6) தியானம்

அலைபாயும் மனதை ஒருநிலையில் நிற்பதற்குச் செய்யும் பயிற்சியே தியானமென்பது. மனதுக்கு அளவிட முடியாத ஆற்றல் உண்டு, அதை பயன்படுத்தத் தெரிந்து கொள்வதால் பல நன்மைகளை அடையலாம். மனம் குரங்கு தாவுவது போல பல தேவையற்ற விடயங்களில் சென்று சக்தியை வீணடிக்கிறது. மனதை ஒருநிலைப் படுத்தப் பழகுவதால் மனதின் ஆற்றல் ஒன்றுதிரள்கிறது. ஒன்று திரட்டப்பட்ட மனம் பல விடயங்களை ஆழமாக அறிந்து கொள்கிறது. மனதை ஒருநிலைப்படுத்தப் பழகியவர்கள் புத்தகம் படிக்கும்போது மிக வேகமாகப் படிப்பார்கள். அறிவு கூர்மையடைகிறது. கெட்டிக்காரர்களாக இருப்பார்கள். தியானப் பயிற்சியினால் பல நோய்கள் தீருகின்றன. உடல் ஆரோக்கியம் பெறுகிறது.

(7) பஜனை

"ஓசை ஒளியெலாம் ஆனாய் நீயே" என்று இறைவன் பாடப்படுகிறார். ஓசையிலே இறைவன் இருக்கிறார். இறைவனின் நாமத்திலே இறைவன் இருக்கிறார். அவனுடைய நாமத்தைப் பாடுவதால் எமது உள்ளத்திலிருந்து தனது உணர்வாகிய இறை உணர்வை வெளிப்படுத்துகிறான் எல்லாம் வல்ல இறைவன். இறைவனின் நாம பஜனை பாடுவதால் இறைவன் மீது பற்று உண்டாகிறது. மனம் தெய்வீக உணர்வால் நிரப்பப்படுகிறது. இறைவனின் நல்லாசிகள் கிடைக்கின்றது.

பண்பான பெற்றோர்களே!

மனம் பண்படுத்தப் பட்டால்தான் பண்பு, பணிவு, நற்பழக்கம் எல்லாம் கிடைக்கிறது. பண்பட்ட மனது உள்ளவர்களால்தான் பண்பாட்டோடு வாழ முடிகிறது. முற்காலத்திலே தமிழர்கள் மனதைப் பண்படுத்தியதனால்தான் பண்பாட்டோடு வாழ்ந்தார்கள், மகிழ்வோடு வாழ்ந்தார்கள், சிறப்போடு வாழ்ந்தார்கள். இன்று மேலைநாட்டு கல்வித்திட்டத்தை நாம் பயின்றதால் மனதைப்பண்படுத்தும் அரிய இரகசியத்தை விட்டு விட்டோம். இனிமேல் பிள்ளைகளாவது இந்த சிறப்பான முறையில் பண்போடும் சிறப்போடும் வாழ வேண்டும் எனும் நோக்கோடுதான் நாம் இந்த அரிய புனித சேவையைச் செய்கிறோம். உங்கள் ஒத்துழைப்பு உங்கள் பிள்ளைகளுக்கு அவசியமாகிறது. உங்கள் ஒத்துழைப்பினால் எமது மன்றம் மேலும் பல பிள்ளைகளுக்கு சமய நற்போதனைகளைக் கற்றுக்

அதுமட்டுமல்ல நல்ல போதனைகளால் பெறும் அறிவினால் நல்லது எது கெட்டது எது எனும் உண்மை உணர்வு பெறப்படுகிறது, தீய வழியினால் தீமை ஏற்படும் என்பதை தாமாகவே அறிந்து கொள்வார்கள். எப்போதும் நல்லவர்களையே நண்பர்களாக தேர்ந்தெடுத்துப் பழகுவார்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் சிரமங்களைப் பொருட்படுத்தாது நல்ல வழியிலேயே வாழ்ந்து முன்னேற்றம் காண்பார்கள். நல்லதை அறிவதால் ஒழுக்கம் உள்ளவர்களாக வாழ்வார்கள். ஒழுக்கமே உயர்ந்த தர்மம். ஒழுக்கமும் நல்ல திறமையும் உள்ளவர்கள் எல்லோராலும் விரும்பப்படுவார்கள்.ஒழுக்கம் உள்ளவர்களால் வழிநடாத்தப்படும் சமூகமே சிறப்படைகிறது. இன்றைய பிள்ளைகளே நாளைய தலைவர்களாகிறார்கள். ஒழுக்கம் உள்ளவர்களுக்குக் கிடைக்கும் புகழ்தான் நிரந்தரமானது.

பிள்ளைகள் நற்புகழைப் பெறும்போதுதான் பெற்றார் உண்மையான மகிழ்ச்சியைக் காண்பார்கள்.

(4) தேவாரம்

தேவாரத்தை வெறும் மனப் பாடம் செய்வதால் எந்த நன்மையும் ஏற்படாது. தேவாரம் ஏன் பாடப்பட்டது. பாடியவர்கள் என்ன நன்மை அடைந்தார்கள், தேவாரத்தில் இருக்கும் கருத்து என்ன என்பதை விளங்கிப் படிக்கும்போதுதான் தேவாரம் படிப்பதனால் பயன் கிடைக்கிறது. நாம் பிள்ளைகளுக்கு தேவாரம் படிப்பிக்கும் போது மேற்கூறிய விளக்கங்களுடன் சொல்லிக் கொடுக்கிறோம்.

(5) இந்து சமய விளக்கங்கள்.

இன்றைய பிள்ளைகள் எதையும் விளக்கத்தோடு கற்பதைத்தான் விரும்புகிறார்கள். எமது இந்து மத சாஸ்திரங்களும், தத்துவங்களும் நிரூபிக்கக் கூடிய உண்மைகளையே கொண்டுள்ளன. பல கடவுள்கள், பல நூல்கள் பல அவதாரங்கள், சொர்க்கம், நரகம், மறுபிறவி, கர்மவினைகள் போன்ற பலவிதமான விளங்கமுடியாத சந்தேகங்களை பிள்ளைகள் கேட்டறிவதற்கு ஆவலாக உள்ளார்கள். இந்து மதத்தின் சிறப்பை அறிந்து கொள்ளமுடியாத பிற மதத்ததினர்களும் இந்து மக்களுக்கும், பிள்ளைகளுக்கும் மனக் குழப்பத்தை ஏற்படுத்தி மதமாற்றம் செய்ய முனைகிறார்கள். பிள்ளைகளின் சமய சம்பந்தமான கேள்விகளுக்கு நாம் சிறந்த முறையில் விளக்கம் சொல்லிக் கொடுக்கிறோம்.

(6) தியானம்

அலைபாயும் மனதை ஒருநிலையில் நிற்பதற்குச் செய்யும் பயிற்சியே தியானமென்பது. மனதுக்கு அளவிட முடியாத ஆற்றல் உண்டு, அதை பயன்படுத்தத் தெரிந்து கொள்வதால் பல நன்மைகளை அடையலாம். மனம் குரங்கு தாவுவது போல பல தேவையற்ற விடயங்களில் சென்று சக்தியை வீணடிக்கிறது. மனதை ஒருநிலைப் படுத்தப் பழகுவதால் மனதின் ஆற்றல் ஒன்றுதிரள்கிறது. ஒன்று திரட்டப்பட்ட மனம் பல விடயங்களை ஆழமாக அறிந்து கொள்கிறது. மனதை ஒருநிலைப்படுத்தப் பழகியவர்கள் புத்தகம் படிக்கும்போது மிக வேகமாகப் படிப்பார்கள். அறிவு கூர்மையடைகிறது. கெட்டிக்காரர்களாக இருப்பார்கள். தியானப் பயிற்சியினால் பல நோய்கள் தீருகின்றன. உடல் ஆரோக்கியம் பெறுகிறது.

(7) பஜனை

"ஓசை ஒளியெலாம் ஆனாய் நீயே" என்று இறைவன் பாடப்படுகிறார். ஓசையிலே இறைவன் இருக்கிறார். இறைவனின் நாமத்திலே இறைவன் இருக்கிறார். அவனுடைய நாமத்தைப் பாடுவதால் எமது உள்ளத்திலிருந்து தனது உணர்வாகிய இறை உணர்வை வெளிப்படுத்துகிறான் எல்லாம் வல்ல இறைவன். இறைவனின் நாம பஜனை பாடுவதால் இறைவன் மீது பற்று உண்டாகிறது. மனம் தெய்வீக உணர்வால் நிரப்பப்படுகிறது. இறைவனின் நல்லாசிகள் கிடைக்கின்றது.

பண்பான பெற்றோர்களே!

மனம் பண்படுத்தப் பட்டால்தான் பண்பு, பணிவு, நற்பழக்கம் எல்லாம் கிடைக்கிறது. பண்பட்ட மனது உள்ளவர்களால்தான் பண்பாட்டோடு வாழ முடிகிறது. முற்காலத்திலே தமிழர்கள் மனதைப் பண்படுத்தியதனால்தான் பண்பாட்டோடு வாழ்ந்தார்கள், மகிழ்வோடு வாழ்ந்தார்கள், சிறப்போடு வாழ்ந்தார்கள். இன்று மேலைநாட்டு கல்வித்திட்டத்தை நாம் பயின்றதால் மனதைப்பண்படுத்தும் அரிய இரகசியத்தை விட்டு விட்டோம். இனிமேல் பிள்ளைகளாவது இந்த சிறப்பான முறையில் பண்போடும் சிறப்போடும் வாழ வேண்டும் எனும் நோக்கோடுதான் நாம் இந்த அரிய புனித சேவையைச் செய்கிறோம். உங்கள் ஒத்துழைப்பு உங்கள் பிள்ளைகளுக்கு அவசியமாகிறது. உங்கள் ஒத்துழைப்பினால் எமது மன்றம் மேலும் பல பிள்ளைகளுக்கு சமய நற்போதனைகளைக் கற்றுக்

அதுமட்டுமல்ல நல்ல போதனைகளால் பெறும் அறிவினால் நல்லது எது கெட்டது எது எனும் உண்மை உணர்வு பெறப்படுகிறது, தீய வழியினால் தீமை ஏற்படும் என்பதை தாமாகவே அறிந்து கொள்வார்கள். எப்போதும் நல்லவர்களையே நன்பர்களாக தேர்ந்தெடுத்துப் பழகுவார்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் சிரமங்களைப் பொருட்படுத்தாது நல்ல வழியிலேயே வாழ்ந்து முன்னேற்றம் காண்பார்கள். நல்லதை அறிவதால் ஒழுக்கம் உள்ளவர்களாக வாழ்வார்கள். ஒழுக்கமே உயர்ந்த தர்மம். ஒழுக்கமும் நல்ல திறமையும் உள்ளவர்கள் எல்லோராலும் விரும்பப்படுவார்கள்.ஒழுக்கம் உள்ளவர்களால் வழிநடாத்தப்படும் சமூகமே சிறப்படைகிறது. இன்றைய பிள்ளைகளே நாளைய தலைவர்களாகிறார்கள். ஒழுக்கம் உள்ளவர்களுக்குக் கிடைக்கும் புகழ்தான் நிரந்தரமானது.

பிள்ளைகள் நற்புகழைப் பெறும்போதுதான் பெற்றார் உண்மையான மகிழ்ச்சியைக் காண்பார்கள்.

(4) தேவாரம்

தேவாரத்தை வெறும் மனப் பாடம் செய்வதால் எந்த நன்மையும் ஏற்படாது. தேவாரம் ஏன் பாடப்பட்டது. பாடியவர்கள் என்ன நன்மை அடைந்தார்கள், தேவாரத்தில் இருக்கும் கருத்து என்ன என்பதை விளங்கிப் படிக்கும்போதுதான் தேவாரம் படிப்பதனால் பயன் கிடைக்கிறது. நாம் பிள்ளைகளுக்கு தேவாரம் படிப்பிக்கும் போது மேற்கூறிய விளக்கங்களுடன் சொல்லிக் கொடுக்கிறோம்.

(5) இந்து சமய விளக்கங்கள்.

இன்றைய பிள்ளைகள் எதையும் விளக்கத்தோடு கற்பதைத்தான் விரும்புகிறார்கள். எமது இந்து மத சாஸ்திரங்களும், தத்துவங்களும் நிரூபிக்கக் கூடிய உண்மைகளையே கொண்டுள்ளன. பல கடவுள்கள், பல நூல்கள் பல அவதாரங்கள், சொர்க்கம், நரகம், மறுபிறவி, கர்மவினைகள் போன்ற பலவிதமான விளங்கமுடியாத சந்தேகங்களை பிள்ளைகள் கேட்டறிவதற்கு ஆவலாக உள்ளார்கள். இந்து மதத்தின் சிறப்பை அறிந்து கொள்ளமுடியாத பிற மதத்ததினர்களும் இந்து மக்களுக்கும், பிள்ளைகளுக்கும் மனக் குழப்பத்தை ஏற்படுத்தி மதமாற்றம் செய்ய முனைகிறார்கள். பிள்ளைகளின் சமய சம்பந்தமான கேள்விகளுக்கு நாம் சிறந்த முறையில் விளக்கம் சொல்லிக் கொடுக்கிறோம்.

(6) தியானம்

அலைபாயும் மனதை ஒருநிலையில் நிற்பதற்குச் செய்யும் பயிற்சியே தியானமென்பது. மனதுக்கு அளவிட முடியாத ஆற்றல் உண்டு, அதை பயன்படுத்தத் தெரிந்து கொள்வதால் பல நன்மைகளை அடையலாம். மனம் குரங்கு தாவுவது போல பல தேவையற்ற விடயங்களில் சென்று சக்தியை வீணடிக்கிறது. மனதை ஒருநிலைப் படுத்தப் பழகுவதால் மனதின் ஆற்றல் ஒன்றுதிரள்கிறது. ஒன்று திரட்டப்பட்ட மனம் பல விடயங்களை ஆழமாக அறிந்து கொள்கிறது. மனதை ஒருநிலைப்படுத்தப் பழகியவர்கள் புத்தகம் படிக்கும்போது மிக வேகமாகப் படிப்பார்கள். அறிவு கூர்மையடைகிறது. கெட்டிக்காரர்களாக இருப்பார்கள். தியானப் பயிற்சியினால் பல நோய்கள் தீருகின்றன. உடல் ஆரோக்கியம் பெறுகிறது.

(7) பஜனை

"ஓசை ஒளியெலாம் ஆனாய் நீயே" என்று இறைவன் பாடப்படுகிறார். ஓசையிலே இறைவன் இருக்கிறார். இறைவனின் நாமத்திலே இறைவன் இருக்கிறார். அவனுடைய நாமத்தைப் பாடுவதால் எமது உள்ளத்திலிருந்து தனது உணர்வாகிய இறை உணர்வை வெளிப்படுத்துகிறான் எல்லாம் வல்ல இறைவன். இறைவனின் நாம பஜனை பாடுவதால் இறைவன் மீது பற்று உண்டாகிறது. மனம் தெய்வீக உணர்வால் நிரப்பப்படுகிறது. இறைவனின் நல்லாசிகள் கிடைக்கின்றது.

பண்பான பெற்றோர்களே!

மனம் பண்படுத்தப் பட்டால்தான் பண்பு, பணிவு, நற்பழக்கம் எல்லாம் கிடைக்கிறது. பண்பட்ட மனது உள்ளவர்களால்தான் பண்பாட்டோடு வாழ முடிகிறது. முற்காலத்திலே தமிழர்கள் மனதைப் பண்படுத்தியதனால்தான் பண்பாட்டோடு வாழ்ந்தார்கள், மகிழ்வோடு வாழ்ந்தார்கள், சிறப்போடு வாழ்ந்தார்கள். இன்று மேலைநாட்டு கல்வித்திட்டத்தை நாம் பயின்றதால் மனதைப்பண்படுத்தும் அரிய இரகசியத்தை விட்டு விட்டோம். இனிமேல் பிள்ளைகளாவது இந்த சிறப்பான முறையில் பண்போடும் சிறப்போடும் வாழ வேண்டும் எனும் நோக்கோடுதான் நாம் இந்த அரிய புனித சேவையைச் செய்கிறோம். உங்கள் ஒத்துழைப்பு உங்கள் பிள்ளைகளுக்கு அவசியமாகிறது. உங்கள் ஒத்துழைப்பினால் எமது மன்றம் மேலும் பல பிள்ளைகளுக்கு சமய நற்போதனைகளைக் கற்றுக்

கொடுத்து அவர்களுக்கும் நல்வாழ்வுக்கு வழிகாட்டமுடிகிறது. நாம் எல்லோரும் நல்வாழ்வு வாழவேண்டும் எனும் சிந்தனை எமக்கு வளரவேண்டும்.

உங்கள் ஒத்துழைப்பு மிக முக்கியமானது.

1) நல்ல தாய் தந்தையரே, உங்கள் பிள்ளைகளை வகுப்புக்குத் தவறாமல் அனுப்பவேண்டியது உங்கள் கடமை.

2) வகுப்பு முடிந்து வீடு வந்ததும் முக்கியமாக குருவணக்கம் செய்தீர்களா என்று தவறாமல் கேட்கவேண்டும்.

3) தினமும் அவர்கள் உங்களை வணங்கும் பழக்கத்தை நாம் சொல்லிக் கொடுத்தாலும் அப்பாவை வணங்கச் சொல்லி தாய் சொல்ல வேண்டும். அம்மாவை வணங்கச் சொல்லி தந்தை சொல்லி வர வேண்டும். ஒரு முறை தாயை வணங்கினாலே நான்குமுறை உலகை வலம் வந்த பலனும், பத்தாயிரம் தடவை கங்கையில் நீராடிய பலனும் கிடைப்பதாக 64வது நாயனாரான திருமுருக கிருபானந்த வாரியார் தமது சொற்பொழிவிலே அடிக்கடி கூறியுள்ளார்.

4) அம்மாவும் அப்பாவும் சண்டை சச்சரவு செய்வதால் ஏதாவது லாபம் உண்டா? இல்லவே இல்லை. அதனால் உண்மையிலே குடும்பத்தின் சந்தோஷம் இல்லாமல் போகிறது. பிள்ளைகளின் நல்ல மனமும் பாதிக்கப்படுகிறது.

5) எண்ணெயும் திரியும் தனித்து இருந்தால் தீபம் ஏற்ற முடியுமா? இரண்டு மின்சாரக் கம்பிகளும்(Positive and Negative) இணைக்கப்படாமல் மின்சார விளக்கு எரியுமா? அதேபோன்று தாயும் தந்தையும் ஒருவரை ஒருவர் அன்போடு நேசித்து வாழும்போது குடும்பம் ஒளி பெறுகிறது. தாயும் தந்தையரும் நல் அறிவை தமக்குள் வளர்த்துக்கொண்டால்தான் குடும்பம் சீரான வழியில் நடைபெறும்.

6) இந்தக் காலத்தில் பணம் எவளவு முக்கியமோ அதேபோல தாயும் தந்தையும் ஒருவரை ஒருவர் உண்மையோடு அன்பாக நேசிக்கவேண்டியது அவசியம். எல்லாம் வல்ல சிவபெருமான் எல்லா ஆண்களின் இதயத்தினுள்ளேயும் அன்னை பராசக்தி எல்லாப் பெண்களின் இதயத்தினுள்ளேயும் நுணுக்கரிய நுண்ணுணர்வாக இருப்பதை நாம் நன்றாக உணரவேண்டும். நல்ல பெற்றார்களே நீங்கள் ஒருவரை ஒருவர் நேசித்து வாழ்வதனால்தான் பிள்ளைகளை நல்ல அறிவு பெறுவதற்காக எமது மன்றத்தின் சமய நற்போதனை வகுப்புக்கு அனுப்பி வருகிறீர்கள்.

7) நல்ல போதனைகளை குருவின் மூலமாகத்தான் கற்க முடியும் எனும் உண்மையை நீங்கள் நன்றாக அறிந்ததனால்தான் நீங்கள் பிள்ளைகளை எமது நற்போதனை வகுப்புக்களுக்கு அனுப்பி வருகிறீர்கள்.

8) வகுப்பு முடிந்து வீடுதிரும்பியதும் நற்போதனைக் குருவினால் சொல்லிக் கொடுத்த நற் போதனைகளைப் பற்றி நீங்கள் பிள்ளைகளிடம் தவறாமல் கேட்பது அவசியம். அது பிள்ளைகளுக்கு மேலும் நன்மையளிக்கும். வீட்டுவேலை கொடுக்கப்பட்டிருந்தால் அதை செய்து முடிக்க நீங்களும் அவர்களுக்கு உதவ வேண்டும்.

9) ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் குரு தட்சணையை நீங்கள் பிள்ளைகளிடம் கொடுத்து அனுப்பும் போது குருவைப் பாத நமஸ்காரம் செய்துவிட்டு தட்சணையைக் கொடுக்க வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுக்க வேண்டும். இப்பழக்கம் மேலும் நல்ல பண்பையும் தர்ம சிந்தனையையும் பிள்ளைகளுக்கு ஏற்படுத்துகிறது. இதன்பயனாக குறைவற்ற செல்வத்தை உங்கள் பிள்ளைகள் பெற்று வாழ்வார்கள்.

10) இரவு நேரத்தில் நீங்கள் குடும்பமாக சேர்ந்து உணவருந்தச் செல்லும் போது மேசையைச் சுற்றி எழுந்துநின்று சிறிய பிரார்த்தனை செய்து வரவேண்டும். முடிந்தால் காயத்ரி மந்திரத்தையும் த்ரியம்பக மந்திரத்தையும் மூன்று தடவைகள் சொல்வது மிக விஷேடமாகும். இவ் இரண்டு மந்திரங்களையும் இந்த நூலிலே சேர்த்துள்ளோம்.

பிள்ளைகள் தினமும் செய்ய வேண்டியவை

1) காலை படுக்கையை விட்டு எழும்போது தமது இரு உள்ளங் கைகளாலும் முகத்தை தடவி உள்ளம் கைகளில் விரல்பாகத்தில் லக்ஷ்மியையும் நடுப்பாகத்தில் சரஸ்வதியையும் அடிப்பாகத்தில் நாராயணனையும் நினைக்க வேண்டும். இதை செய்து வருவதால் அன்றைய தினம் நல்ல தினமாக அமைகிறது.

2) பல்துலக்கி உடல் சுத்தம் செய்ய வேண்டும்.

3) கடவுள் வணக்கம் செய்ய வேண்டும்.

4) பாடசாலை செல்லும் போது பெற்றாரை வணங்கிச் செல்ல வேண்டும். இப்பழக்கத்தைச் சிறுவயதிலே பழக்கத்தில் கொண்டுவருவது அவசியம்.

5) மாலை வீடு வந்ததும் அவர்களை விளையாட்டுக்குக் கூட்டிச்செல்வது அவசியம். மாலையில் விளையாடுவதால் உடல் ஆரோக்கியம் பெறுகிறது. ரீ வீ பார்க்கும் பழக்கமும் குறைகிறது.

6) விளையாட்டு முடிந்ததும் குளிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். பின்பு தியானத்திலமரும் பழக்கம் மிக முக்கியமானது. இரவுச் சாப்பாடு 5.30 மணியிலிருந்து 7.30 மணிக்குள் சாப்பிடுதல் நன்று. குடும்பத்தினர் எல்லோரும் சேர்ந்து உண்பது மிக நன்று. உணவுக்கு முன்பு எல்லோரும் எழுந்து நின்று கூற்றாயின வாறு விலக்ககலீர் எனும் தேவாரம் காயத்ரி மந்திரம் த்ரியம்பக மந்திரம் ஆகியவற்றை எல்லோரும் சேர்ந்து சொல்லி விட்டுச் சாப்பிடுதல் நன்று.

இந்த இரவு நேரப் பிரார்த்தனையால் உங்களுக்கு உள்ள கஷ்டங்கள் சங்கடங்கள் நீங்குவதோடு பல நன்மைகள் உங்களை வந்தடையும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஆனந்தமும் அதிகரிக்கும்.

7) வீட்டுக்கு வரும் விருந்தினர்களை கைகூப்பி வணக்கம் கூறி வரவேற்கும் பழக்கத்தினை பிள்ளைகளுக்கு ஏற்படுத்த வேண்டும். இறைவன் எல்லோருக்குள்ளும் இருக்கிறார், எனவே நாம் பிறர் மீது அன்பு செலுத்தும் பழக்கத்தை ஏற்படுத்துவது நன்று.

8) சாப்பாட்டுக்குப் பின் சிறிது நேரம் பிள்ளைகளை ரீவீ பார்க்க அனுமதிக்கலாம். பின்பு வீட்டுப் பாடங்களைச் செய்ய அவர்களோடு சேர்ந்து ஒத்தாசை செய்தல் நன்று.

9) இரவு 9.30 மணியிலிருந்து 10.00 மணிக்குள்ளாக பிள்ளைகள் நித்திரைக்குப் போகும் பழக்கத்தை ஏற்படுத்துவது நல்லது.

10) நித்திரைக்குப் போகுமுன் காலைக் கழுவிச் சுத்தம் செய்துவிட்டு அம்மா அப்பாவின் பாதங்களைத் தொட்டு வணங்கிவிட்டு நித்திரைக்குச் செல்ல வேண்டும்.

மேற்கூறிய ஒழுக்கவிதிகளை கடைப்பிடிக்கச் செய்வதன் மூலம் பிள்ளைகளுக்கு பக்தியும் நற்பழக்கங்களும் ஏற்படுகிறது.

பிள்ளைகளை அடிப்பதும் பயமுறுத்துவதும்

பிள்ளைகளை அடிப்பதும் பயமுறுத்துவதும் தவறான செயல் என்பதை நாம் நன்றாக அறியவேண்டும். பிள்ளைகள் இறைவனால் கொடுக்கப்பட்ட விலை மதிப்பற்ற செல்வங்கள். பிள்ளைகள் தெய்வத்துக்குச் சமமானவர்கள். அவர்களைக் கண்காணிப்பதே பெற்றாரின் கடமை. அவர்களுக்கு நல்வாழ் வுக்கான வழி வகுப்பதே பெற்றாரின் கடமை. பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமுடையதாக்க நற்பழக்கம் நல்லறிவை இளமையில் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியத்தை பெற்றார்

அறிந்து கொள்ளவேண்டும். அதற்காகிய நற் போதனைக் குருவிடம் பிள்ளைகளை சிறிய வயதிலேயே அனுப்ப வேண்டும். குருவின் போதனைகளாலேயே பிள்ளைகள் நல்ல பழக்கத்தையும் நல்ல அறிவையும் பெறுகிறார்கள். நல்ல போதனைகளைப் பெறும் பிள்ளைகள் தாய் தந்தையருடைய சொற் கேட்டு நடக்கும் பிள்ளைகளாக வளருகிறார்கள்.

பிள்ளைகளை அடிப்பதனாலும் பயமுறுத்துவதனாலும் அவர்களுடைய மனவளர்ச்சி தடைப்படுகிறது. விபரீதமான சிந்தனைகளுக்கு ஆளாகிறார்கள், படிப்பிலும் ஆர்வத்தைக் குறைத்துக் கொள்ளுவார்கள். இதனால் பெற்றாரிடமும் பிள்ளைகளுக்கு வெறுப்பு ஏற்படுகிறது, குடும்பத்தில் அன்பு விடுபடுகிறது. எனவே பிள்ளைகளுக்கு நல்ல புத்திமதிகளைக் கொடுத்தும் நல்ல சூழ்நிலையையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பொதுப் பாடசாலைகள்

ரொரன்ரோ மாநகரப் பொதுப் பாடசாலைகளில் சமய பாடம் கற்றுக் கொடுப்பதில்லை. அத்தோடு இக்காலத்துக் கல்விமுறை தொழில் கல்விமுறையோடு சம்பந்தப்பட்டது. குடும்பப் பண்பாட்டிற்கான நல் அறிவை இங்கே பெற முடியாது. குடும்ப வாழ்வு எல்லோருக்கும் மிக முக்கியமானது. குடும்பம் என்பது வெறும் காம போகத்திற்காக அமைப்பதல்ல. உண்மையில் குடும்பம் என்பது புனிதமான இயக்கமே. கணவன் மனைவி பிள்ளைகளிடையே ஒற்றுமையையும் அன்பையும் வளர்த்து பண்போடு வாழும் வாழ்க்கையே மேன்மையான நாகரிகமான வாழ்க்கை. இங்கே பெரும்பாலான பெற்றார் ஒற்றைப் பெற்றோராக (Single parent) வாழுகிறார்கள். காம உறவு நண்பர்களாக வாழுகிறார்கள். இதற்கு அரசாங்கம் சட்டத்தின் மூலமாகப் பாதுகாப்பும் வழங்குகிறது. இங்குள்ள பிள்ளைகள் வதைச் சட்டமும், பெண்கள்வதைச் சட்டமும் சிறு குறிப்பிட்ட வீதத்தினருக்காக ஏற்படுத்தப்பட்டது, ஆனால் இச் சட்டத்தின் நோக்கத்தை சரியாகப் புரிந்து கொள்ளாமல் எமது இனத்தவர்கள் அதிகமானோர் பாதிப்படைந்து வருகிறார்கள்.

இங்குள்ள சட்டங்களும் கல்விமுறையும் பிள்ளைகளை எமது கலாச்சாரத்தைப் பின்பற்றுவதிலிருந்து விலக்கிவிடுகின்றது. இதிலிருந்து நாம் பிள்ளைகளைக் காப்பாற்றியாக வேண்டும். அவர்களை நல்ல வழியிலே திசை திருப்பி நல்லவர்களாகவும் நல்ல குடும்பத்தை அமைத்து வாழக்கூடியவர்களாகவும் ஆக்கு

தல் பெற்றாரின் தலையாய கடமையன்றோ.

எமது தாய் மொழி நல்ல தமிழ் மொழி

இந்த நாடு பல கலாச்சார மக்களைக் கொண்ட நாடு கனடா அரசாங்கமும் அவரவர் கலாச்சாரத்தை ஊக்குவிப்பதற்காக பல வழிகளில் உதவுகிறது. அவரவர் தாய் மொழிகளைப் பயில்வதற்கும் உதவியளிக்கிறது. தாய் மொழி ஒவ்வெருவருக்கும் மிகவும் முக்கியமான ஒன்று என்பதை எல்லா உலக அறிஞர்களும் மேதைகளும் ஒத்துக் கொண்டுள்ளார்கள். ஆனால் தூரதிருஷ்ட வசமாக எமது பல தாய் தந்தையர்கள் தாம் ஆங்கிலம் பழகுவதற்காகவும், தமது பிள்ளைகள் ஆங்கிலம் பேசுகிறார்களே என்று நினைப்பதில் மகிழ்ச்சியடைபவர்களாக இருப்பதைப் பார்க்க மிக வேதனைப்பட வேண்டிய விடயமாக உள்ளது. இப்படியான தாய் தந்தையர் தமது பிள்ளைகள் தாய்மொழியை மறப்பதனால் பிள்ளைகளின் வாழ்வு சிரழிவுக்குள் தள்ளப்படுகிற தென்பதை அறிந்து கொள்வதில்லை. நாளை தாய்மொழியை மறக்கும் பிள்ளைகள் இங்குள்ள சட்டங்களின் துணைகொண்டு தாம் போன போக்கில் விலங்கு வாழ்க்கையான உடல் உறவுத் துணைவர்களோடும் (Boy friend Girl friend) ஒற்றைப் பெற்றார்களாகவும் (கணவன் அல்லது மனைவியற்ற) வாழ்க்கை நடாத்துவார்கள் என்பதை அறியாத பெற்றார்களாகவும் நித்திரை மயக்கத்தில் வாழுகின்றார்கள். இப்படியான தாய் தந்தையர்கள் விழித்துக் கொள்ள வேண்டும்.

பெற்றோர்கள் அறிவற்றவர்களாக வாழ்ந்து பிள்ளைகளின் எதிர்காலத்தைச் சீரழிக்க வேண்டுமா? உண்மையை அறியவேண்டும்! எழவேண்டும்! விழித்துக் கொள்ளவேண்டும்!

வேதாந்த ஞான மன்றம் சிறு பிள்ளைகளுக்கு நல்ல அறிவைப் போதிக்க முன்வந்துள்ளது. விழித்துக் கொண்ட பெற்றார்கள் தங்கள் கடமையை செய்யும் அறிவு உள்ளவர்கள். எனவே எம்மிடம் சமய தமிழ் போதனைகளைக் கற்க அனுப்பும் பெற்றார்களாகிய நீங்கள் நல்லதை அறியும் ஆற்றல் உள்ளவர்கள், பண்பானவர்கள், பெருமைக்குரியவர்கள்!

பெருமதிப்புக்குரிய பெற்றார்களே!

உங்கள் பிள்ளைகள் எமது போதனைகளால் நாளுக்கு நாள் சிறிது சிறிதாக நல்லறிவும் நற்பழக்கமும் பெறுவார்கள். உங்கள் இல்லங்கள் தெய்வீக அலைகளால் சூழப்பட்டு உங்கள் துன்பங்கள் கஷ்டங்கள் மறைய ஆரம்பிக்கும். உங்கள் இல்லங்க

ளில் மங்களம் உண்டாகும். உங்கள் பிள்ளைகள் நல்ல அறிவாற்றல் உள்ளவர்களாகவும், ஆரோக்கியம் உள்ளவர்களாகவும், நல்ல பண்பு கொண்டவர்களாகவும், பிறரால் மதிக்கப்படுபவர்களாகவும் வளர்ந்து நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்வார்கள்.

☙ உங்கள் இதயங்களில் வீற்றிருக்கும் எல்லாம் வல்ல இறைவன் உங்களை வழிநடத்தி உங்கள் தேவைகளை நிறை வேற்றிவைப்பாராக!

☙ நாம் கூறும் வணக்கங்கள் உங்கள் மூலமாக உங்கள் இதயத்தில் வீற்றிருக்கும் எல்லாம் வல்ல இறைவனைச் சேரவும், நாம் ஒருவரை ஒருவர் அன்போடு நேசித்தும், தெய்வீகம் நமக்குள் ஊடுருவவும், அன்பு நிறைந்த மனத்தால் உங்களை வணங்கி விடைபெறுகிறோம்.

☙ நன்றியும் வணக்கமும்!

வேதாந்த ஞான மன்றத்தினர்(கனடா)

பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு முக்கியமானது எது என்பதை அறிந்து கொள்ள முடியாத பல தாய் தந்தையர் தூக்க மயக்கத்தில் வாழுகிறார்கள். இப்படியான கவனக்குறைவான தாய் தந்தையரின் பிள்ளைகளின் வாழ்வே அநியாயமாக சீரழிகிறது. இது மிகவும் வேதனைக்குரியது. இப்படியான பெற்றார் தமது தவறை உணர்ந்து, உண்மையை அறிந்து தமது பிள்ளைகளின் வாழ்வும் நலம் பெற ஊக்கம் எடுக்க வேண்டும் என்பதை நாமெல்லோரும் சேர்ந்து அவர்களுக்கு உணரவைக்க முயற்சிப்போமாக.

"பிறர் பிள்ளை தலைதடவ தன்பிள்ளை தானாக வளரும்"

எமது சேவையை நீங்கள் உங்களுடைய நண்பர்களுக்குச் சொல்வதால் அவர்களுடைய பிள்ளைகளும் பயனடைவார்கள், அதன்பயனாக நீங்கள் இறைவனின் கருணையையும் நல்ல சேவைக்கான புண்ணிய பலனையும் பெறுகிறீர்கள். உங்கள் பிள்ளைகளும் சகல நன்மைகளையும் பெறுவார்கள். பிறர்நலம் பேணுவதால் தர்மம் உங்களை எப்போதும் காப்பாற்றும்.

ஓம் தத் சத்!

தர்மம் நம்மை பல வழிகளிலும் காப்பாற்றுகிறது

எனவே தானமும் தர்மமும் செய்யும் உணர்வை பிள்ளைகளுக்கு வளர்க்க வேண்டும்

"அறம் செய்ய விரும்பு" என்று ஔவையார் ஏன் சொன்னார். நாம் ஏன் அறம் செய்ய வேண்டும்? பெரியோர்கள், நல்லவர்கள், சான்றோர்கள் தமது அனுபவத்தாலும், ஞானத்தாலும் பெற்ற உண்மைகளையே மனிதகுல நன்மைக்காக எடுத்துச் சொல்லியுள்ளார்கள். அதனை அறிந்து கடைப்பிடித்தவர்கள் நன்மை அடைந்திருக்கிறார்கள். அறம் என்றால் தர்மம். தர்மம் என்பது ஒழுக்கம், அதை வள்ளுவரும் ஒழுக்கம் விழுப்பம் தரலான் எனும் குறள் மூலம் விளக்குகிறார். நான்கு வேதங்களும் புனித நூல்களும் எல்லாச் சமயங்களும் தர்மத்தை வலியுறுத்துகின்றன.

1. பிறருக்குத் தீமை செய்யாமல் இருப்பதால் நமக்கு தீமைகள் வராது.
2. பிறருக்கு உதவி செய்வதால் எமக்கு தேவைப்பட்ட நேரங்களில் உதவி தானாக வந்து சேருகிறது.
3. கஷ்டப்படுபவர்களுக்கும் நல்ல காரியங்களுக்கும் பணத்தைத் தானம் செய்வதால் நமக்கு நல்ல வேலையும் வியாபார முன்னேற்றமும் பணவசதியும் செல்வமும் சேருகிறது. நல்லதைச் செய்து மிஞ்சியபின் சேமிக்கும் பணமே சந்ததிக்குப் பயன்படுகிறது.
4. பிறர்மீது அன்பு செலுத்துவதால் இறைவன் நமக்கு நல்லபக்தியையும் அமைதியையும் மகிழ்ச்சியையும் தருகிறார்.
5. நோயாளர்களுக்கு நல்மனதோடு உதவுவதால் எமக்கு நல்ல ஆரோக்கியமும் நீடித்த ஆயுளும் கிடைக்கிறது.
6. நல்லவர்களோடு சேர்வதால் நாம் எப்போதும் துன்பத்தில் இருந்து விடுபட்டு நன்மை அடைவோம். எனவே நல்லவர்களை சினேகிதர்களாகக் கொள்ள வேண்டும். வீணான தேவையற்ற, தீமையான விடயங்களையும், தீயவர்கள், பேராசையுள்ளவர்களின் உறவையும் விலக்க வேண்டும்.
7. எப்போதும் நல்ல அறிவுள்ள நூல்களையே படிக்க வேண்டும்.

" நன்றும் தீதும் பிறர் தர வாரா " என்பதை நாம் நன்கு உணரவேண்டும். நாம் எதை நினைக்கின்றோமோ, எதைச் சொல்லுகின்றோமோ, எதைச் செய்கின்றோமோ எல்லா வினைகளும் நம்மை வந்து சேரும். வரும்போது பல மடங்காக வருகின்றது. நம்மிடம் திரும்பிவரும் வினைகளை நாம் அனுபவித்து

த்தான் ஆக வேண்டும். பலர் பாடுபட்டுச் சேர்த்துவைத்த பணம் அவர்களுக்குப் பயன்படாமல் போனதைக் கண்டிருக்கிறோம், ஆசையோடு கட்டிய வீட்டைப் பலர் இழந்து நிற்பதைக் கண்டிருக்கிறோம். சிலர் அதிஷ்டசாலிகளாக இருப்பதையும் கண்டிருக்கிறோம். இதெல்லாம் அவர் அவர் செய்த வினைகளால் நடக்கின்றன. வினைகளின் செயல்பாட்டை ஒழுங்கு படுத்துவதுதான் தர்மம் அதாவது அறம். நம் கண்முன்னே ஒருவர் கஷ்டப்படும்போது உதவி செய்யாமல்விட்டால் நமக்குக் கஷ்டம்வரும்போது நாம் சேர்த்துவைத்த பணம்கூட நமது துன்பத்தைத் தீர்க்காது. எனவே நாம் பிறருக்கு உதவவேண்டும்.

வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது தர்மம். அதாவது ஒழுக்கம். பிள்ளைகளின் எதிர்காலமும் நமது எதிர்காலமும் சிறக்கவேண்டுமாயின் நாம் அறம் செய்ய விரும்பவேண்டும். விருப்பம் வந்துவிட்டால் செயல்பாடு தானே நடக்கும். பிள்ளைகளையும் அறம் செய்யப் பழக்கவேண்டும். பிள்ளைகள் தானம் செய்து பழகிவந்தால் அவர்கள் படிப்புமுடிந்ததும் நல்ல வேலை பெற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தினால் கூட நிறையச் சம்பாதிக்க முடியும். கேட்கும்போது கொடுப்பவர்களுக்கு அதன் பலன் சில மடங்காக வரலாம் ஆனால் கேட்காமலே கொடுத்து உதவிசெய்பவர்களுக்கு பல நூறு மடங்காக பலன் கிடைக்கிறது. இதுவே தர்மத்தின் இரகசியம்.

எனவே பிள்ளைகள் எதிர்காலத்தில் சகல செல்வமும் பெற்று சீரோடு வாழ நாம் வழிகாட்ட வேண்டுமானால் பிஞ்சு மனங்களிலே நல்ல அறநெறிகளாகிய தர்ம உணர்வை விதைக்க வேண்டும். பெரியவர்களுக்கும், நோயாளர்களுக்கும், சமூகநலனுக்கும் உதவப் பழக்கவேண்டும். கஷ்டப்படுபவர்களுக்கும் நல்ல காரியங்களுக்கும் தானம் வழங்கப் பழக்க வேண்டும். தினமும் ஐந்து சதமோ பத்துச்சதமோ அல்லது முடிந்ததை கடவுளை வணங்கும் போது ஓர் உண்டியலில் போட்டு வரப் பழக்க வேண்டும், இது எமது நாட்டிலே துயரப்படும் மக்களுக்காக சேர்த்து அனுப்பும் பணம் என்பதை தெரியப்படுத்த வேண்டும். வாரத்தில் ஓர் நாள் நல்ல சேவைக்காக (தெய்வீக சேவை அல்லது சமூக சேவை) செய்ய பழக்கி வரவேண்டும். பிறரை நேசிப்பதும், பிறருக்கு உதவுவதும், வறியோருக்கு தானம் வழங்குவதும் இறைவனுக்கு நாம் செய்யும் சிறந்த வழிபாடாகும்.

முன்பு நாம் செய்ததை இப்போ அனுபவிக்கிறோம், இப்போ நாம் செய்வதை நாளை அனுபவிப்போம். எனவே நல்லதைச் செய்து நல்லதைப் பெறுவோமாக. "நன்றும் தீதும் பிறர் தர வாரா"

தெய்வீக சேவை(அறம்) செய்ய விரும்பும் அன்பர்களுக்கு!

" அறம் செய்ய விரும்பு "

அறம் எனப்படும் தர்மம் பலவகையில் சிறந்தது. நாம் வீணான காரியங்களில் ஈடுபட்டு துன்பத்தைத்தான் அதன் பிரதிபலனாக வாங்கிக் கொள்ளுகின்றோம். நாம் நல்லதைச் செய்வதால் இன்பத்தையும் மன அமைதியையும் இறைவனின் கருணையையும் பெறுகிறோம்.

மக்கள் சேவையே மகேசன் சேவை என்று சான்றோர்கள் கூறினார்கள். ஊனுடம்பு ஆலயம் என்றார்கள், எனவே இறைவன் சிறப்பாகக் குடிகொள்ளும் ஆலயம் மனித சரீரங்களே. மனிதர்களுக்குச் செய்கின்ற சேவையே இறைவனுக்கு நாம் நேரடியாகச்செய்யும் சேவையாகும். பிறர்மீது அன்பு செலுத்துவதே இறைவன் மீது கொள்ளும் உண்மையான பக்தியாகும். யாரெல்லாம் துன்பத்தில் இருக்கிறார்களோ அவர்களுக்கு நாம் இறைவனின் மகிமையையும், அன்பின் இரகசியத்தையும் கூறவேண்டும். நோயாளிகளுக்குச் சேவை செய்யவேண்டும். வறியவர்க்கு பொருள் கொடுத்து உதவவேண்டும்.

அறியாமல் செய்த பிழைகளுக்காக சிறையில் வாடும் நம் சகோதரர்களுக்கு ஆறுதல்கூறி அவர்களின் எதிர்காலத்துக்காக அவர்களோடு சேர்ந்து பிரார்த்தனை பண்ணுவதோடு நல்ல உண்மையான அறிவுரைகளை வழங்கவேண்டும். சிறுவர்களை நல்வழிப்படுத்த முயற்சிக்க வேண்டும். நல்லதை பிறருக்குச் செய்யும்போது எமது மனமும் தூய்மை அடைகிறது, அத்தோடு தெய்வீகம் நம்மிடமிருந்து வெளிப்படுகிறது.

மேற்கண்ட பல சமய சமூக சேவை செய்வதற்கு ஆர்வமுள்ள அன்பர்கள் எம்மோடு இணைந்து கொள்ளுங்கள். நிறை நிலையில் இருக்கும் இந்து மதத்தின் உண்மைகளை அறிந்து நாம் மிக உயர்ந்த பண்பாடு உள்ளவர்களாக. இந்து மதத்தின் சிறப்பினால் நாம் பிறருக்குப் பயன் உள்ளவர்களாக. தெய்வீகத்தை உணர்ந்து பிறருக்கு உணரவகை செய்பவர்களாக நாம் செயலாற்ற வேண்டும். இதனால் எமது வாழ்வும் மேன்மையடைகிறது.

சேவை செய்யவிரும்பும் மெய் அன்பர்களை வரைக்கத்தோடும் மகிழ்ச்சியோடும் நாம் வரவேற்கிறோம்.

- வேதாந்த ஞான மன்றத்தினர் -

தின வழிபாட்டுக்கான தேவாரங்களும் மந்திரங்களும்

பிள்ளையார்

1 ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்திஞ் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

2 பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் -
கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

3 அரகர சிவகத கணபதி சரணம்
அடியவர் வினைகெட அருள்பவ சரணம்

நினைபவர் பவமற நினைபவ சரணம்
நெடியவன் விழிதரு நெடியவ சரணம்

வலவையை மருவிய புயதர சரணம்
வடிவிஞி லுயரிய பெரியவ சரணம்

முறைதெரி மறையவ ரிறையவ சரணம்
முடியடி தெரிவரு முதியவ சரணம்

4 கலைநிறை கணபதி சரணம் சரணம்
கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவநின் இணையடி சரணம் சரணம்
சரவண பவகுஹ சரணம் சரணம்
சிலைமலி யுடையவ சரணம் சரணம்
சிவசிவ சிவசிவ சரணம் சரணம்
உலைவறு மொருபரை சரணம் சரணம்
உமைசிவை யம்பிகை சரணம் சரணம்

காயத்ரீ மந்திரம்

வேதங்களின் உட் கருத்துக்களெல்லாம் காயத்ரீ மந்திரத்தில் அடங்கியிருக்கின்றன என்பது ஐதீகம். காயத்ரீயில் கருத்து யாதென்று ஆராய்ந்து பார்க்குமிடத்துப் பரம்பொருளுக்கும் ஜீவாத்மனுக்கும் இடையில் உள்ள இனக்கத்தை அது ஞாபகமூட்டுகிறது. ஜீவாத்மனைப் பரமாத்மன் மயமாகப் பண்படுத்துதற்கு அது வழிகாட்டித் தருகிறது. ஆக ஜீவாத்மன் பரிணமித்து மேலோங்கி வந்து பரமாத்மனைச் சேர்வது குறிக்கோள். இது வேதங்களின் திட்டம். மானுட வாழ்க்கையின் முடிந்த நோக்கம் இதுவேயாம். இந்த நோக்கததைச் சுருக்கமாகக் காயத்ரீ மந்திரம் தெளிவுபடுத்துகிறது. ஆதலால்தான் காயத்ரீ மந்திரத்தை வேதங்களின் சாரம் என்று சான்றோர்கள் சாட்டியிருக்கின்றனர். இந்தக் காயத்ரீ மந்திரத்தில் இறைவனுடைய அருளும் ஜீவப்பிரயத்தனமும் அடங்கியிருக்கின்றன.

- சுவாமி சித்பவானந்தர் -

" ஓம் பூர் புவஸ்ஸுவ:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோதயாத் "

பொருள்: யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்த சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக.

தியானத்தில் போது காயத்ரீ மந்திரத்தைத் தியானிப்பவர்களின் தியானம் விரைவில் பலனளிக்கிறது. காயத்ரீ மந்திரத்தை எந்த நேரத்திலும் நீங்கள் சொல்லலாம். குளித்துக்கொண்டிருக்கும் போது சொன்னால் இறைவனுக்கு அபிஷேகம் செய்வதற்குச் சமனாகும். எமது உடம்பு இறைவனின் சிறந்த ஆலயம் என்பதை நாம் நன்றாக உணர்ந்து கொண்டால் பாவங்கள் நம்மைவிட்டு நீங்கி நாம் உயர்ந்தவர்களாவோம். இறைவன் நம்முள்ளே இருப்பதை ஆழமாக உணர்ந்து காயத்ரீ மந்திரத்தை சொல்லும்போதும் நினைக்கும் போதும் தியானிக்கும் போதும் நாம் அதிசயிக்கத்தக்க தெய்வீக உணர்வைப் பெறுகிறோம். பஜனை மண்டபங்களில் பலர் கூடி ஒருமித்த மனதோடு சொல்லும்போது அந்த இடத்திலும் அங்கு கூடியுள்ளோர் உள்ளங்களிலும் தெய்வீக அலை வீசும். அவர்களின் தேவைகள் இறைவனால் நிறைவேற்றப்படும்.

மரணத்தை வெல்லும் மந்திரம்

மஹா ம்ருத்யுஞ்ஜய மந்திரம்

" ஓம் த்ரயம்பகம் யஜாமஹே ஸுகந்திம் புஷ்டி வர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனாத் ம்ருத்யோர் முக்ஷீய மாம்ருதாத்"

மார்க்கண்டேயர் மேலே கூறிய மந்திரத்தை ஜெபித்தே 16 வயதில் அவருக்கு ஏற்பட்ட மரணகண்டத்திலிருந்து நீங்கி மரணம் இல்லாப் பெருநிலை பெற்றார். நாமும் மேற்கூறிய த்ரயம்பக மந்திரத்தை விசுவாசத்துடன் ஜெபம் செய்வதால் மரணகண்டங்கள் நம்மை விட்டு நீங்கும், நோய்கள் குணமாகும். எல்லாம் வல்ல த்ரயம்பகன் என்று மூவுலகும் போற்றும் முக்கண்ணனான சிவபெருமானின் அருள் நமக்குக் கிடைக்கும்.

சிவபெருமான்

1 பித்தாபிறை சூடிபெரு மானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தாஉனக் காளாயினி அல்லேன்எனல் ஆமே

2 மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

வேதத்திலுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந்தருவது நீறு புன்மை தவர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையிலுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே.

முக்தி தருவது நீறு முனிவரணிவது நீறு
சத்தியமாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு

பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே.

பூச இனியது நீறு புண்ணியமாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே.

3 காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தம்மை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

4 கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிரவும் பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 1

நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன்
நினையாதொரு போதும் இருந்தறியேன்
வஞ்சம் இது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடிக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீ ரதிகைக்கடில
வீரட்டா னத்துறை யம்மானே 2

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்

உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே. 3

5 சொற்றுனை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலினிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.

6 மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

நமச்சிவாயவே ஞனமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாதவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.
வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே.
விறகில் தீயினன் பாலிற் படுநெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

பெரிய புராணம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

7 அன்பர்தஞ் சிந்தையில் உறைவோனே
அரகர சிவசிவ மறையோனே

பொன்னே மணியே பூங்கோவே
புலவரெல் லாம்புகழ் எங்கோவே

காணுங் கண்ணிற் கலந்தவனே
கதிரொளி போலெங்கும் நிறைந்தவனே

ஆணும் பெண்ணும் ஆனவனே
அடியவர் பேணும் வானவனே

கோணிய பிறையை முடித்தவனே
கொல்புலித் தோலை யுடுத்தவனே

வேணியிற் கங்கை தரித்தவனே
வேழத்தின் தோலை யுரித்தவனே

பாற்கடல் தன்னை அழைத்தவனே
பாரொடு விண்ணாய்ப் பரந்தவனே

நூற்பொருள் தன்னை விரித்தவனே
நுண்ணிடை யாள்தன் இடத்தவனே

தில்லையில் ஆடிய சிற்பரனே
சிவசிவ சிவசிவ தற்பரனே

எல்லையில் லாவருள் தந்தவனே
என்போல் நல்லையில் வந்தவனே

- ஸ்ரீ யோக சுவாமிகள் -

8 சிவ சிவ சிவ சிவ சபாபதே
சிவகாமி ஸுந்தர உமாபதே
ஹர ஹர ஹர ஹர மஹாதேவா
பார்வதி ரமணா ஸதாசிவா!
சிவ சிவ சிவ சிவ சிவாய நம ஓம்
ஹர ஹர ஹர ஹர ஹராய நம ஓம்!

9 நடராஜா நடராஜா நர்த்தன ஸுந்தர நடராஜா
சிவராஜா சிவரஜா சிவகாமி ப்ரிய நடராஜா
நடராஜா நடராஜா ஆனந்த தாண்டவ நடராஜா
நடராஜா நடராஜா தில்லைத் தாண்டவ நடராஜா.

10 சிவாய பரமேச்வராய சசிகேசராய நம: ஓம்
பவாய குணசம்பவாய சிவதாண்டவாய நம: ஓம்
ஜிதாய குணரஞ்சிதாய முனிசித்திதாய நம: ஓம்
ஹிதாய ஹரி ஸன்னுதாய ஸுரவந்திதாய நம: ஓம்.

11 சிவ மஹேஸ்வரா சிவ மஹேஸ்வரா
சிவ மஹேஸ்வரா சம்போ
சிவ மஹேஸ்வரா சிவ சங்கரா
சிவ மஹாதேவா சம்போ
கைலாசவாசா மஹாதேவா
ஜகதீஸ்வர பவ மஹா தேவா
த்ரி புவன பவ மஹா சங்கரா

ஸ்ரீ நாராயணன்

1 ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய (ஓம்)

பிறவிதோறும் வினைமிகுந்து பெருகுகின்ற இருளினை
அகல வைக்கும் அருணதீபம் ஓம் நமோ நாராயணாய
(ஓம்)
ஊறுதுன்பம் உடல்வியாதி ஊழ்விடாதே வறுமையும்
ஆறவைக்கும் அருள்மருந்து ஓம் நமோ நாராயணாய
(ஓம்)
ஏக்கமாம் குளிக்குள்ளே இரண்டுருண்ட வேளையில்
தூக்கிடும் துணைக்கரங்கள் ஓம் நமோ நாராயணாய
(ஓம்)
சோகமோஹ தாகமீறிச் சோர்வு விஞ்சும் வேளையில்
கருணையான புனிதகங்கை ஓம் நமோ நாராயணாய
(ஓம்)
ஜனனமரண பயதரங்க ஸாகரம் கடத்தியே
உடனுவந்து காக்கும் ஓடம் ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

கடுகடுத்து முனைதொடுத்த காலசூலம் சீறுநாள்
உயிர் தடுத்த கவசமாகும் ஓம் நமோ நாராயணாய
(ஓம்)
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
உலகெலாம் முழங்க வேண்டும் ஓம் நமோ நாராயணாய
(ஓம்)

2 கிருஷ்ணா முகுந்தா ஜனார்த்தனா
சச்சிதானந்த நாராயணா ஹரே
அச்சுதானந்த கோவிந்த மாதவா
சச்சிதானந்த நாராயணா ஹரே!

ஸ்ரீ ராமர்

1 ஸ்ரீராம் ஜயராம் ஜய ஜய ராம் (3 தடவைகள்)
நாராயண ஓம் நம: சிவாய வெனுஞ்
சாரமான நல்ல தாரக மந்த்ரம் (ஸ்ரீராம்)

நாரதர் வால்மீகி முனிவர் நவின்றது
ஆரமுதாய் அன்பர்க் கானந்தம் ஈன்றது (ஸ்ரீராம்)

காமாதி கள்வரைக் கட்டுடனொழிப்பது
நேமநிஷ்டை யுள்ள நெஞ்சினில் செழிப்பது (ஸ்ரீராம்)

பக்தி வைராக்யமும் பரந்த ஸமரஸமும்
சுத்த சச்சிதானந்த ஸித்தியும் அளிப்பது (ஸ்ரீராம்)

நாமாவளிகள்

2 ஸ்ரீராம ஜய ராம ஜய ஜய ராம, ஓம்
ஸ்ரீராம ஜய ராம ஜய ஜய ராம, ஓம்

3 அயோத்யா வாஸீ ராம்... தசரத நந்தன ராம்
ஜானகி ஜீவன ராம்... ஸ்ரீராம ராம ஜய ராம்
(அயோத்)
ஜானகி ஜீவன ராம ராம... ராம ராம ஜய ராம்

4 ஸீதாராம் ஸீதாராம் ஸீதாராம் ஜய ஸீதாராம்
தசரத நந்தன ஸீதாராம் கங்கா யமுனா ஸீதாராம்

5 தசரத நந்தன ராம் ராம், தசமுக மர்தன ராம் ராம்
பசுபதி ரஞ்சன ராம் ராம், பாபவிமோசன ராம் ராம்
மணிமய பூசண ராம் ராம், மஞ்ஜுள பாஷண ராம் ராம்
ரணஜய ரக்ஷக ராம் ராம், ராக்ஷஸ காதக ராம் ராம்

6 ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே!
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே!!

ஸ்ரீ கிருஷ்ணர்

பல்லவி

7 அலைபாயுதே கண்ணா என் மனம் மிக
அலைபாயுதே உன் ஆனந்தமோகன வேணுகானமதில்
(அலைபாயுதே)

அனுபல்லவி

நிலை பெயராது சிலைபோலவே நின்று
நேரமாவதறியாமலே மிக வினோதமான முரளீதரா
என் மனம் (அலைபாயுதே)

சரணம்

தெளிந்த நிலவு பட்டப் பகல் போல் எரியுதே உன்
திக்கை நோக்கி என்னிரு புருவம் தெரியுதே
கனிந்த உன் வேணுகானம் காற்றில் வருகுதே
கண்கள் சொருகி ஒருவிதமாய் வருகுதே

கதித்த மனத்தில் உறுத்தி பதத்தை எனக்கு
அளித்து மகிழ்த்த வா ஒரு
தனித்த வனத்தில் அணைத்து எனக்கு
உணர்ச்சி கொடுத்து மகிழ்த்த வா

கனைகடல் அலையினில் கதிரவன் ஒளியென
இணையிரு கழலெனக் களித்தவா
கதறிமனமுருக நானழைக்கவோ
இதர மாதருடன் நீ களிக்கவோ

இது தகுமோ இது முறையோ
இது தர்மம் தானோ குழல்
ஊதிடும் பொழுது ஆடிடும் குழைகள் போலவே
மனது வேதனை மிகவொடு (அலை பாயுதே)

நாமாவளி

8 ஆனந்த சாகரா முரளிதாரா
மீரா ப்ரபு ராதே ஸ்யாம் வேணு கோபாலா
நந்த யசோதா ஆனந்த சிஹோரா
ஜெய் ஜெய் கோகுல பால ஜெய் ராஜ கோபாலா

9 யமுனாதீரனிஹாரி ப்ருந்தாவன சஞ்சாரி
கோவர்த்தன கிரிதாரி கோபாலகிருஷ்ணமுராரி

சரயூதீர விஹாரி முனிமானஸ சஞ்சாரி
தானவமத சம்ஹாரி தம்மோத்தாரனதாரி

கங்காதீர விஹாரி பரம்மானந்த சஞ்சாரி
லீலாவிக்ரஹதாரி ஸ்ரீராமகிருஷ்ண முராரி

மங்களகுண கணதாரி சமாதிமார்க்க சஞ்சாரி
ஸஜ்ஜன மங்களகாரி சமரஸபாவனதாரி

முருகன்

1 அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் வா வா முருகா
இன்ப மய ஜோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே வா வா முருகா
உரகநாதன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா
எட்டுக்குடி வேலவா நீ வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே வா வா முருகா
ஆறுமுக வேலவனே வா வா முருகா
ஒய்யாரி வள்ளிலோலா வா வா முருகா
ஓங்கார தத்துவமே வா வா முருகா
ஔவைக்குப தேசித்தவா வா வா முருகா
அகில லோக நாயகனே வா வா முருகா
ஓடிவா நீ ஓடிவா நீ வா வா முருகா
ஆடிவா நீ ஆடிவா நீ வா வா முருகா

2 சுப்ரமண்யம் சுப்ரமண்யம் சன்முகநாதா சுப்ரமண்யம்
சுப்ரமண்யம் சுப்ரமண்யம் சன்முகநாதா சுப்ரமண்யம்

அரஹர சிவசிவ சுப்ரமண்யம்
சிவசிவ அரஹர சுப்ரமண்யம்

சிவசிவ சிவசிவ சுப்ரமண்யம்
அரஹர அரஹர சுப்ரமண்யம்

சக்தியுமை பாலா சுப்ரமண்யம்
சிவகுரு நாதா சுப்ரமண்யம்

கணபதி சோதர சுப்ரமண்யம்
வள்ளிலோலா சுப்ரமண்யம்

சரவணபவனே சுப்ரமண்யம்
சூரசம்ஹாரா சுப்ரமண்யம்

3 சிவசிவ சிவசிவ குருநாதா
சிவஸுந் தரஷண் முகநாதா
சிவசிவ ஷண்முக சிவநாதா
சிவபதந் தந்தருள் குருநாதா
கந்தா முருகா உமைமைந்தா
கருணைக் கடலே கதிர்காமா
வருகவே மயில் மிசைக் குருநாதா
வள்ளி தெய்வானை மணவாளா
ஹரிஓம் ஹரஹர சரவண பவனே
சரணம் சரணம் ஷண்முக குஹனே
முருகா முருகா திருமால் மருகா
முருகா முருகா கதிர்வேல் குமரா!

4 ஜய ஜய முருகா ஜய வேல் முருகா
முருகா முருகா திருமால் மருகா!
முருகா முருகா வெற்றிவேல் முருகா
மயில் வாஹனனே மனமோஹனனே!
பாவங்கள் தீர்ப்பாய் பார்வதி மைந்தா
பக்தரைக் காக்கும் செந்தூர் முருகா!

திருப்புகழ்

1 ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மனம் புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே

2 பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

3 முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவேல் அரசே சரணம் சரணம்
மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.

போற்றி

4 மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி
திருக்கை வேல் போற்றி போற்றி

வாழ்த்து

5 ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீரடியா ரெல்லாம்!

அரஹரோகரா, அரஹரோஹரா
அரஹரோகரா - சுவாமி அரஹரோஹரா
திருச்செந்தூர் முருகனுக்கும் - அரஹரோஹரா
தருத்தணிகை வேலனுக்கும் அரஹரோஹரா (அர)
பழனிமலை பாலனுக்கும் - அரஹரோஹரா
பரமசிவன் மைந்தனுக்கும் அரஹரோஹரா (அர)
கதிர்காம வேலனுக்கும் - அரஹரோஹரா
கந்தசாமி கடவுளுக்கும் - அரஹரோஹரா (அர)
கலியுக வரதனுக்கும் - அரஹரோகரா
கண்கண்ட தேவனுக்கும் - அரஹரோஹரா (அர)
வெள்ளிமலை வேலனுக்கும் - அரஹரோஹரா
வள்ளிமண வாளனுக்கும் - அரஹரோஹரா (அர)
அபிஷேகப் பிரியனுக்கும் - அரஹரோஹரா
ஆனந்த வடிவனுக்கும் - அரஹரோஹரா (அர)

6 ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே

- கந்தர நுபூதி

திருப்புகழ்

1 ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மனம் புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே

2 பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

3 முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவேல் அரசே சரணம் சரணம்
மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.

போற்றி

4 மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி
திருக்கை வேல் போற்றி போற்றி

வாழ்த்து

5 ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீரடியா ரெல்லாம்!

அரஹரோகரா, அரஹரோஹரா
அரஹரோகரா - சுவாமி அரஹரோஹரா
திருச்செந்தூர் முருகனுக்கும் - அரஹரோஹரா
தருத்தணிகை வேலனுக்கும் அரஹரோஹரா (அர)
பழனிமலை பாலனுக்கும் - அரஹரோஹரா
பரமசிவன் மைந்தனுக்கும் அரஹரோஹரா (அர)
கதிர்காம வேலனுக்கும் - அரஹரோஹரா
கந்தசாமி கடவுளுக்கும் - அரஹரோஹரா (அர)
கலியுக வரதனுக்கும் - அரஹரோகரா
கண்கண்ட தேவனுக்கும் - அரஹரோஹரா (அர)
வெள்ளிமலை வேலனுக்கும் - அரஹரோஹரா
வள்ளிமண வாளனுக்கும் - அரஹரோஹரா (அர)
அபிஷேகப் பிரியனுக்கும் - அரஹரோஹரா
ஆனந்த வடிவனுக்கும் - அரஹரோஹரா (அர)

6 ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே

- கந்தர நுபூதி

திருப்புகழ்

1 ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மனம் புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே

2 பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

3 முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவேல் அரசே சரணம் சரணம்
மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்.

போற்றி

4 மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி
திருக்கை வேல் போற்றி போற்றி

வாழ்த்து

5 ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்க சீரடியா ரெல்லாம்!

அரஹரோகரா, அரஹரோஹரா
அரஹரோகரா - சுவாமி அரஹரோஹரா
திருச்செந்தூர் முருகனுக்கும் - அரஹரோஹரா
தருத்தணிகை வேலனுக்கும் அரஹரோஹரா (அர)
பழனிமலை பாலனுக்கும் - அரஹரோஹரா
பரமசிவன் மைந்தனுக்கும் அரஹரோஹரா (அர)
கதிர்காம வேலனுக்கும் - அரஹரோஹரா
கந்தசாமி கடவுளுக்கும் - அரஹரோஹரா (அர)
கலியுக வரதனுக்கும் - அரஹரோகரா
கண்கண்ட தேவனுக்கும் - அரஹரோஹரா (அர)
வெள்ளிமலை வேலனுக்கும் - அரஹரோஹரா
வள்ளிமண வாளனுக்கும் - அரஹரோஹரா (அர)
அபிஷேகப் பிரியனுக்கும் - அரஹரோஹரா
ஆனந்த வடிவனுக்கும் - அரஹரோஹரா (அர)

6 ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே

- கந்தர நுபூதி

சக்தி

1 சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்
சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்

சத்யஞான தர்மசக்தி சாந்தசக்தி ஓம்சிவம்
சச்சிதானந் தாத்மசக்தி சர்வசக்தி ஓம்சிவம் (சு)

வேதசாஸ்த்ர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம் (சு)

நாததீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மஹாமந்த்ர யந்த்ர-தந்த்ர வச்யசக்தி ஓம்சிவம் (சு)

யோகபோக த்யாகசக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாகமோஹ சோகரஹித தபோசக்தி ஓம்சிவம் (சு)

துஷ்டசத்துரு நாசசக்தி துர்காசக்தி ஓம்சிவம்
அஷ்டலக்ஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம் (சு)

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபரசிவ ஹரஹர நடராஜ சுத்த சக்தி ஓம் (சு)

2 ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்

ஸுந்தரவதனி ஸுகுண மனோகரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தண குங்கும அலங்காரமுடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே (ஓம்)

நந்திதேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனையனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே (ஓம்)

தங்கச் சிலம்பு சலசல வென்றிட

தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்குமானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்தமான ஜேதிஸ்வரூபி
ராஜராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம்)

வெள்ளைத் தாமரை வீணையள்

3 வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறுங்
கருணை வாசகத்துட் பொருளாவாள் (வெள்ளை)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்
கீதம் பாடிடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரங் கோபுரங் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள் (வெள்ளை)

4 வெள்ளைக் கமலத்திலே அவள்
வீற்றிருப் பாள் புக ழேற்றிருப் பாள்
கொள்ளைக் கனியிசை தான் நன்கு
கொட்டுநல் யாழினைக் கொண்டிருப் பாள்
கள்ளைக் கடலமு தை-நிகர்
கண்டதொர் பூந்தமிழ்க் கவிசொல வே
பிள்ளைப் பருவத் திலே-எனைப்
பேணவந் தாளருள் பூணவந் தாள்

வேத பாடம்

ஓம் ஸஹ நாவவது !
ஸஹ நௌ புனக்து !
ஸஹ வீர்யம் கரவாவஹை !!
தேஜஸ்விநா - வதீதமஸ்து மா வித்விஷாவஹை !!
ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :

ஓம் (குரு சிஷ்யர்களாகிய எங்களை) இருவரையும் சேர்த்து (பிரம்மம்) காப்பாற்றட்டும், சேர்த்துப் போஷிக்கட்டும். இருவரும் சேர்ந்து வீரியத்துடன் உழைப்போமாக, எங்கள் அத்தியயனம் ஒளி பொருந்தியது ஆக வேண்டும். (நாங்கள் ஒருவரையொருவர்) பகைத்துக் கொள்ளாமலிருக்க வேண்டும்.

ஓம் மூவகையிலும் சாந்தி நிலவுக.

ஓம் அசதோ மா ஸத்கமய !
தம ஸோ மா ஜ்யோதிர்கமய !
ம்ருத்யோர்மா அம்ருதம் கமய !!
ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி : !!

ஓம் அசத்தியத்திலிருந்து சத்தியத்திற்கு என்னை அழைத்துச் செல்வாயாக! அஞ்ஞான இருளிலிருந்து மெய்ஞ்ஞான ஒளிக்கு என்னை அழைத்துச் செல்வாயாக! மரணத்திலிருந்து மரணமிலாப் பெருநிலைக்கு என்னை அழைத்துச் செல்வாயாக! ஓம்.

ஓம், தேஜோஸி தேஜோ மயி தேஹி !
வீர்யமஸி வீர்யம் மயி தேஹி !
பலமஸி பலம் மயி தேஹி !
ஓஜோஸி ஓஜோமயி தேஹி !
மன்யுரஸி மன்யும் மயி தேஹி !
ஸ ஹோஸி ஸஹோ மயி தேஹி !
ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி : !!

ஓம் இறைவா, நீ எல்லையற்ற ஆற்றல், எனக்கு ஆற்றலைக் கொடு, நீ எல்லையற்ற வீரியம், எனக்கு வீரியத்தைக் கொடு, நீ எல்லையற்ற வலிமை, எனக்கு வலிமையைக் கொடு, நீ எல்லையற்ற ஊக்கம், எனக்கு ஊக்கத்தைக் கொடு, நீ எல்லையற்ற வீரம், எனக்கு வீரத்தைக் கொடு, நீ எல்லையற்ற உறுதி, எனக்கு உறுதியைக் கொடு.

ஓம் ஸர்வே பவந்து ஸுகின : !
ஸர்வே ஸந்து நிராமயா : !
ஸர்வே பத்ராணி பச்யந்து !
மா கச்சித் துக்கபாக் பவேத் !!
ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி : !!

ஓம் எல்லோரும் நலமாக வாழ்க! எல்லோரும் நோயின்றி வாழ்க! எல்லோருக்கும் மங்களம் உண்டாகுக! யாரும் துன்புறாதிருக்கட்டும்!

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே !
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவசிஷ்யதே !!
ஓம் சாந்தி:! சாந்தி:! சாந்தி:!

ஓம், கடவுள் பரிபூரணப் பொருள், காணும் இந்த உலகமும் பூரணமானது. பூரணமான உலகம் பூரணமான இறைவனிடமிருந்தே வந்துள்ளது. அனைத்து உலகங்களும் தன்னிடமிருந்து வெளிப்பட்டும், பரிபூரணமான கடவுள் குறைவின்றி பரிபூரணராகவே இருக்கிறார்.

வேதாந்த ஞான மன்ற அங்கத்தினர், ஆசிரியர்கள்,மாணவர்கள், மன்ற மாணவர்களின் பெற்றார்கள், மன்றத்தின் சத்சங்கத்தில் பங்குகொள்வோர் யாவருக்கும், எல்லோர் குடும்பத்தினருக்கும், இறைவனின் சிறப்பான ஆசீர்வாதம் கிடைப்பதற்கு எமது விஷேட பிரார்த்தனைகளும் நல்லாசிகளும் உரித்தாகட்டும்.

இரண்டு இடங்களில் நடைபெறும் சிறப்பான

“சத் சங்கம்”

வேதாந்த ஞான மன்றத்தின் சிறப்புச் சேவைகளில் ஒன்றான “சத் சங்கம்” ஸ்காபரோவிலும் மிசிசாகாவிலும் நடைபெறுகிறது.

“பணிவாலும் பரிவு மிகுந்த கேள்வியாலும் சேவையாலும் அதை(ஞானத்தை) அறிக, மெய்ப் பொருள் கண்ட ஞானிகள் உனக்கு உபதே சிப்பார்கள்.” (கீதை 4: 34)

“ இந்த ஞானத்தை அறிந்து மறுபடியும் இவ்வாறு மோகத்தை அடையாமாட்டாய்: இதனால் மிச்சமின்றி எல்லா உயிர்களையும் உன்னிடத்தும் மேலும் என்னிடத்தும் காண்பாய்.” (கீதை 4: 35)

பஜனை, தியானம், பகவத் கீதை விளக்கங்கள், ஆன்மீக சந்தேகங்களுக்கான உங்கள் கேள்விகளுக்கு பதில் அளித்தல், யோகப் பயிற்சிகள், ஆன்மீகச் சொற்பொழிவுகள், ஆரோக்கிய வழிக்காண ஆலோசனைகள், தீராத நோய் களைக் குணப்படுத்தும் சித்தவைத்திய ஆலோசனைகள் போன்றன நடைபெறுகின்றது.

விசுவாசத்துடன் தொடர்ந்து பங்கு கொள்வோர் நன்மையடைவார்கள்.

எல்லையற்ற ஆற்றல் ஒவ்வொருவரிடமும் உண்டு அதை வெளிப்படுத்தவும் பயன்படுத்தவும் முயல்பவர்களுக்கும்,

உயர்ந்த ஆன்மீக லாபத்தையும், இறைஅருளையும் பெறுவதற்கும் சத் சங்கம் துணை செய்கிறது.

ஸ்காபரோவில் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் சாமி அன் சன்ஸ் 1884 கெல்லிவீதி (எல்ஸ்மெயர் சந்திப்பு) மாலை 6.00 மணியிலிருந்து 9.00 வரை

மிசிசாகாவில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் 1440 புளோர் வீதி கிழக்கு # 604 (டிக்ஸி அவ் புளோர் சந்திப்பு) மாலை 7.00 மணியிலிருந்து 9.30 வரை நடைபெறுகிறது. (416) 264-5440 (905) 238-5609

நல்லதை அறிந்தால் மட்டும் போதாது!
அறிந்ததை ஆராய வேண்டும்!
உண்மையை உணரவேண்டும்!
உணர்ந்ததை செயல்படுத்த வேண்டும்!

முற்றும் முழுதான சுயநலம் கொண்ட மனிதன்
தனது சந்ததியின் சீரழிவுக்கு விதை போடுகிறான்!

சீவனும் சிவனும் வேறென்பர் அறிவில்லாதவர்கள்
சீவனும் சிவனும் ஒன்றென்பர் சான்றோர்
சீவனுக்குச் செய்யும் சேவையே மிகச் சிறந்த சிவசேவை
ஒவ்வொரு மனிதசரீரங்களிலும் சிவன் உறைகிறார்
ஒவ்வெரு மனித சரீரங்களும் சிவனின் ஆலயமே!

ஒவ்வொரு மனிதரையும் நாம் வணங்குவதால் அந்த வணக்கத்தை அவர்கள் இதயத்துக்குள் இருக்கும் சிவன் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளுகின்றார்!

எமது மன்றம் விரும்புவது பேரும் புகழுமல்ல, ஒவ்வொரு மனிதர்களுக்கும் சேவை செய்வதனால் அதைக் கண்டு இறைவன் மகிழ்ச்சிகொள்கிறார், அந்த மகிழ்ச்சியிலே எமக்கும் பங்கு தருகிறார். அந்த தெய்வீக அருளே நாம் வேண்டிநிற்பது. நாம் பிறர் நலத்தை விரும்புவதால் எமது தேவைகளை இறைவன் நிறைவேற்றி வைக்கிறார்!

வேதாந்த ஞான மன்றம்

வைத்தியம்! சோதிடம்! யோகம்!

- மருந்து மாத்திரைகளின்றி யோக சக்தியாலும் சித்த வைத்திய முறையாலும் உங்கள் தீராத நோய்களைத் தீர்க்கிறார்!

- எதிர்கால விளைவுகளை முன்கூட்டியே அறியவும், குறிப்பின் மூலம் தீர்க்கமான பலனை அறிந்து கொள்ளவும், சோதிட ஞானத்தால் உங்களுக்கு சிறந்த அறிவுரை கூறுகிறார்!

- சிறந்த முறையில் திருமணப் பொருத்தம் பார்க்கிறார்!

- யோகப் பயிற்சியாலும் பல சங்கடங்கள் தீர வழிகாட்டுகிறார்!

தவத்திரு யோகி பஞ்சாட்சரனார்

(கனடா வேதாந்த ஞான மன்ற ஆலோசகரும், சமயப்பள்ளிக்கூட அதிபரும்)

தொடர்புகளுக்கு

(416) 269 6129

சிறந்த பயனைத் தரும் விஷேட யாத்திரை!



எமது மன்றத் தலைவர் அடியாரினால் அழைத்துச் செல்லப்படும் விஷேட யாத்திரை,வயோதிபர்களின் நலன் கருதி இந்தியாவில் வெப்பம் இல்லாத நல்ல சீதோஷ்ண நிலையுள்ள காலமான மார்ச்மாதமும் செப்டம்பர்மாதமுமே கூட்டிச் செல்லப்படுகிறது!

ஆறுபடைவீடுகள், முக்திதரும் சிவதலங்கள், மற்றும் வடஇந்தியா தென்இந்தியாவிலுள்ள மிக முக்கிய புண்ணிய ஷேத்திரங்களும், இமயமலைச் சாரலிலிருந்து காசி இராமேஸ்வரம் உட்பட கன்னியாகுமரிவரை 46 புனிதத் தலங்கள் தரிசனம்!

உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகால், சாஜகான் அரண்மனை போன்றவற்றையும் பார்வையிடுகிறோம்.

ஏற்கனவே அடியாரினால் அழைத்துச் செல்லப்பட்ட யாத்திரையை வீடியோப் படம் மூலம் பார்க்க விரும்பும் அன்பர்கள் எம்மைத் தொடர்புகொள்ளலாம்.

ஒவ்வொரு யாத்திரையும் வீடியோப் படப்பிடிப்புச் செய்து யாத்திரையில் பங்குகொள்ளும் அன்பர்களுக்கு வீடியேப் பிரதி வழங்கப்படுகிறது. பாதுகாப்பான முறையில் சகல பிரயாண ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படுகிறது.

விபரங்களுக்கு அழையுங்கள்:

உங்கள் அடியார்

(416)769-7747 | (416)805-7187

மாலை 6.00க்குப்பின்பும் சனி ஞாயிறும்